# 2

# சொர்க்கமே என்றாலும் . . . .

# நகரமா, நரகமா?

## பயிர்

"ஏண்டி, சுப்பலச்சிமி! தம்பியக் காணல, நீ மட்டும் வார?" கொத்தவரங்காய்க் குச்சிப் பின்னலில் ஒட்டாமல் கழன்றுவிட்ட ரோஸ் நறுக்கு முடிச்சைக் கையில் வைத்து நிமிண்டிக் கொண்டிருந்த சுப்பலச்சிமி, தாயின் கேள்விக்கு விடை அளிக்கவில்லை.

"ஏண்டி, மக்கு! தம்பியக் கையோட அழச்சிட்டு வரணுமில்ல? சோறு சாப்புட்டீங்களா?"

"சோறு இல்லம்மா! இன்னிக்கு சொதந்தர தினமில்ல? சோறு இல்ல. முட்டாய்கூட அல்லாருக்கும் குடுக்கல. தம்பி ராசு கையிலேந்து புடுங்கித் தின்னிட்டான்னு அடிக்க வந்தப்ப ஓடிப் போயிட்டான். எங்கே போனான்னு தெரியல..."

"மக்கு பொணமே, தெரியலியாம்...! எல்லாப் புள்ளங்களும் வந்திட்டாங்களே...? முருவா, ராக்கு! நாவு எங்கேடா?..." காஞ்சி, கிராமத்தை விட்டுப் பிரியும் வயற்காட்டுப் பாதையில் அலையக் குலைய ஓடுகிறாள். சுதந்திர நாளில் அணிந்துசெல்ல புதுச்சட்டை வேண்டும் என்று அவளைப் பத்து நாட்களாக நச்சரித்து, புதுச் சட்டை பெற்றிருக்கிறான். மாரியாங்குடி 'டைலர்' கடையில் கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சி, கடனுக்கு ஒரு சட்டை பெற்று வந்திருக்கிறாள். அவனுக்கு மட்டும் சட்டை என்று மகளுக்கு ஒன்றுமில்லாமல் இருக்க முடியுமா? பின்னலில் வைத்து முடிய கலர்கலராக நாலைந்து நறுக்குத் துண்டுகளைத் தையற்கடைக் கழிவில் இருந்து பொறுக்கி வந்தாள். இந்த ஆடி ஆவணிச் சந்தியில், விளைநிலங்கள் இப்படியா இருக்கும்? கால்வாய்களில் கரைபுரளும் தண்ணீர், குளங்களில் அலைமோதி இனிய ஒலியைக் காற்றிலே பரப்பும். பொழுது விடியுமுன்பே, ஏரோட்டப் போகிறவர்களும், சோற்றுத் தூக்கைப் பிடித்துக் கொண்டு அங்கே நடவு, இங்கே நடவு என்று கால்களில் மந்திரசக்தி வந்தாற்போல் விரைந்து செல்பவருமாக இந்தப் பாதைகளும் களங்களும் வாழ்க்கையின் இனிய நம்பிக்கை நயங்களாக நெருங்கிக் கிடக்குமே? இன்று வெறிச்சிட்டுக் கிடக்கிறது. வெறும் மண்ணாக, உலர்ந்து உடைத்த கட்டிகளின் ஈரமற்ற பரப்பாக, வரப்புகளுக்கும் எந்த ஒரு தனித்துவமும் இல்லாத வெறுமையாக விரிந்து கிடக்கிறது. குளம், கால்வாய், எதிலும் ஈரமில்லை. ஆங்காங்கு கிராம வளங்களின் 'அடிபம்பு'களிலும்கூடக் குழாய்கள் விறைப்புத் தளர்ந்து ஆணி ஒடிந்து உதவாமற்போன நிலையை எடுத்து இயம்பிக் கொண்டு வறண்டு கிடக்கின்றன.

கோலாகலமாக, சேற்றுக் களியில் காலூற வண்ண வண்ணமாகக் குனிந்து, பச்சை நாற்றுக் களைப் பூப்பூவாகத் தொட்டு நாரில் இணைப்பது போல் பூமித்தாயின் மடியிலே பரப்பிக் கோலம் போடுவார்களே? ஆடிப்பதினெட்டுக்குக் கரை புரளும் வாய்க்கால் ஓரத்து அரளியில் கொத்துக் கொத்தாக மலர்ந்து மணம் பரப்புமே? மரமல்லிகைப் பூக்கள் கொல்லென்று ஒரு சாரலுக்குத் தாளாமல் பூப்பாவாடை விரிக்குமே? குதுகுதுப்பான குளிர்ச்சாரலும், ஈரவாடையும், பசுமையின் எழிலார்ந்த நம்பிக்கைகளாகப் பால் வார்க்குமே? அனைத்தும் கனவுதானா? இனியும் வாராவோ?

அதோ, சில பிள்ளைகள், வங்காரம் புதூர்ப் பள்ளிப் பாதையில் வருகிறார்கள்.

''தே, ராசப்பா, சீதேவி, எங்க நாவு எங்கே?.."

“அவெ, ஓஎஞ்சிசி (ONGC) வண்டி கூட ஓடிப்போயிட்டான்...”

கபீரென்று வயிற்றைக் கலக்குகிறது.

“எங்கடா? சுளிவலம் பக்கமா ஓடினான்?...”

“இல்லத்தே! இங்கதா, புலியூரு பக்கம் வண்டிங்க, டாங்கரு, ஜீப்பு அல்லாம் போவுது..”

“புலியூரு பக்கமா?”

‘அவுங்க மத்திய சருக்காரு. மண்ணெண்ணெ கண்டுபுடிச்சித் தோண்டுறாங்க. நாம இனிமே, மாரியாங்குடி கடைக்குப்போய், லைனுல நிக்க வாணாம், நம்ம ஊரிலெல்லாம் கூட வந்திடும் என்று, சொக்கு வாத்தியாரும் சைக்கிள் மணியப்பனும் கூறியது நினைவில் முட்டுகிறது... ஆனால், இந்தப் பையன்... அந்த வண்டியைத் துரத்திக் கொண்டு செல்வது ஆபத்தல்லவா?

முன்பு பூக்கழுனிப்பக்கம், இப்படி தொத்திக் கொண்டுபோன பிள்ளை, ‘தண்ணீர் டாங்கி’ திரும்பியதும் தூக்கி எறியப்பட்டானாம். மண்டையில் அடிபட்டு, திருவாரூர் ஆசுபத்திரிக்குக் கொண்டு செல்ல வண்டிவசதி இல்லாமலே இறந்து போயிற்றாம். இம்மாதிரிச் செய்திகள் இறகுகள் சிறகுகளை ஒட்டிக்கொண்டு, கிராமத்து நெஞ்சங்களைத் தஞ்சம் அடைந்து விடுவது உண்மை. “சீப்பு வண்டி போச்சாம், கெஞ்சினாங்களாம். அவெ காதுலே போட்டுக்காமலே போயிட்டானாம்” என்றாள், தங்கம்மா. அவள் மச்சான் பூக்கழனியில் டீக்கடை வைத்து இருக்கிறான். “அவனுவ, நம்ம பாசை பேசலியே? என்னமோ பேச்சுப் பேசுறானுவளாம்... எந்த நாட்டிலேந்தோ வந்து இங்க மிசின ஓட்டுறானுவ.. நாம யாரிட்டப் போயி பேசறது? பேச்சு புரியாம நாம போயி என்னா சொன்னா கேக்கப் போறானுவ? நாயத்த ஆரம்மா கேக்கப்போறா?...” என்று அவன் சொன்னதெல்லாம் நெஞ்சில் படம் போல் மின்னுகின்றன.

இவர்கள் ஊரிலேயே ஐந்து வகுப்புவரையிலானதொரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கு வாத்தியார் யாரும் சரியில்லை. சுப்பலச்சிமியை ஒரு வருசம் முழுதுமாக அனுப்பி இருந்தாள். அவள் முதல் வகுப்பு முழுதும் படித்தும், எதுவும் தெரியவில்லை. பிறகுதான் இரண்டு பேரையும், இந்த வருசத்திலிருந்து, வங்காரம் புதூர்ப் பள்ளிக்கு அனுப்புகிறாள். நாகப்பன் மிக ஊக்கமாகப் படிக்கிறான் என்று அவளுக்கு மிகுந்த பெருமை. இரண்டாம் வகுப்புப் படிக்கும் அடுத்த குட்டிப்பையன் சீனிவாசனின் பாடமெல்லாம் கூட இவனுக்கு அத்துபடி.

தொலைவில் பிரும்மாண்டமான தண்ணீர்ப் பானையை முதுகில் சுமந்து கொண்டு, உழவோட்டிய உலர்நிலத்தினிடையே ஒரு வண்டி செல்கிறது. அதன் பின்வளைவில் ஈ எறும்புகள் போல் நாலைந்து பிள்ளைகள்...

காஞ்சி அந்தப் பக்கம், வயலின் குறுக்காக இறங்கி விரையுமுன், ‘யம்மோ’ என்ற இளங்குரல், தேனாகச் செவிகளில் பாய்கிறது. பையன் கிழக்கிலிருந்து ஓடி வருகிறான்.

புதிய சட்டையில் ஈரம்...

“எங்கடா போன? அத்தினி பிள்ளங்களும் பள்ளிக்கொடம் வுட்டு வந்தாச்சி, நீ எங்க போன?”

குரலில் சிறிது கடுமை இருந்தாலும் உடலில் ஒவ்வோர் அணுவும் பூரிக்கப் பார்க்கிறாள். அடுத்த கணம் அவள் கரங்களில் சிறைப்படுகிறான் பொடியன்.

‘‘அந்த வண்டிலல்லாம் போகாதடா கண்ணு. போன மாசம் பூக்கழனியில ஒரு பயல், ஒன்னப்போலத் தொங்கிட்டுப் போனா, வண்டி திலும்பறப்ப வுழுந்து காணாமாப் போயிட்டானய்யா.. நீ அங்க இங்க போவாம, பள்ளிக்கொடம் வுட்டதும் நேரா வந்தருணும்டா கண்ணு?”

“எல்லோருக்கும் சொதந்தரதின முட்டாய் குடுத்தாங்க. எங்கிட்ட வரப்ப, தீந்து போச்சின்னிட்டாங்கம்மா!... ராசய்யன் சொல்லுறான், உங்கப்பாரு சேவக்கட்சி, அதனால தான் ஒனக்கு முட்டாயில்லன்னு...” காஞ்சிக்குக் கண்களில் நீர் தளும்புகிறது.

தேர்தல் சமயத்தில் நடந்த அடிதடி சண்டையில்தான் இவன் அப்பன் குஞ்சான் யாரையோ வெட்ட முயற்சி செய்தான் என்று பிடித்துப் போனார்கள். மூன்று வருசம் தண்டனை பெற்று இப்போது சிறையில் இருக்கிறான்.

சூரியன், சேவல், இலை, கை என்று எந்தக் கட்சி என்று புரியாமல் அடித்துக்கொண்டு, ஊரையே ரணக்களமாக்கினார்கள். அப்போது இவள், குறைப்பிள்ளை பெற்றுக் குற்றுயிராகக் கிடந்தாள்.

பையன் சட்டைப்பையில் கைவிட்டு நச நசத்துப்போன மேல் வண்ணக் காகிதத்துடன் ஒட்டிக்கொண்ட நிலையில் ஒரு மிட்டாயை எடுத்துக்காட்டுகிறான்.

“முட்டாயி வாத்தியாரு குடுக்கலன்னே?”

‘‘ஓஎஞ்சிசி டைவர் குடுத்தாரம்மா! பின்னால ஏறிட்டாக்கூட ஒண்ணும் சொல்ல மாட்டாரு. சிரிப்பாரு. இன்னிக்கு சுதந்தர தினமில்ல? அவரு எங்களுக்கு முட்டாய் குடுத்தார். ரெண்டு முட்டாய். ஒண்ணு தின்னுப்பிட்டேன். இது அக்காளுக்கு...”

காஞ்சி, மனமுருகிக் கண்ணீர்க் கன்னத்தில் அவனை அழுத்திக்கொண்டு ஊரை நோக்கி நடக்கிறாள். அந்தக் கணத்தில் சுவர்க்கத்துப் பூம்பல்லக்காக நடை அனுபவம் பெறுகிறது.

“பள்ளிக்கொடம் போற புள்ளய தூக்கிக் கொஞ்சிட்டு வர காஞ்சி! எல எறங்குடா கீள?” இலுப்பை மரத்தடியில் சொக்கு வாத்தியாரும் சேமனும் குந்தி இருக்கின்றனர். சொக்கு வாத்தியார் என்ற பெயர் எப்போது, எப்படி வந்ததென்றோ எந்தப் பள்ளியில் அவர் வாத்தியாராக இருந்தாரென்றோ அவளுக்குத் தெரியாது. அவள் பண்டாரங்கோயிலில் இருந்து, குஞ்சானைக் கட்டி இந்த வரங்குடி ஊருக்கு வந்த நாளிலும் இப்படிப் பல்லில்லாத நிலையில் ஒட்டி உலர்ந்துதானிருந்தார். கீற்றுமுடையும் வேலை. தனியாள் சம்பாதித்ததை எங்கேனும் கொடுத்து பசியாறிவிட்டு, ஊர்க்கதைகள் பேசுவார். அவர் நேர்மை மாறாதவர், நாலும் அறிந்த விவேகி என்ற மாதிரியானதொரு மதிப்பும் மரியாதையும் அந்தக் குடிமக்களுக்கு அவர்மீது இருந்தது. சேமன் இவள் புருசனுக்குத் தம்பியாகும் மச்சான். இவள் கல்யாணம் கட்டி வருகையில் இந்த நாகப்பனைப் போல்தான் இருப்பான்.

இவள் வயித்துப் பிள்ளைபோல் அன்றே ஒட்டிவிட்ட பிள்ளை. இப்போது பூநாற்றுப்போல மீசை அரும்பும் பருவம். உள்ளூரின் ஐந்து வகுப்புக்களை முடித்துவிட்டான். அக்காலம் அடுத்த பள்ளிக்குத் திருவாரூர்தான் போக வேண்டும், போகவில்லை. வயலிலும் வரப்பிலும் பாடுபட்டுப் பழகி விட்டான். உழைத்துப் பாடுபட்டுப் பத்து மூட்டைக்குக் குறையாமல் நெல் எடுப்பார்கள். அவ்வப்போது, பயறு, உளுந்து, சேம்பு என்று, பாடுபடுவதால் பலன் உண்டு என்று கண்டிருக்கிறார்கள். அந்தத் தெம்புதான், மீண்டும் மீண்டும் இவள் பெற்ற பிள்ளைகளைக் கழிச்சலிலும் கபத்திலும் பறிகொடுத்தாலும் இரண்டைப் பொத்திப் பொத்தி வளர்க்க ஆதரவாக இருந்தது. கட்சி கிட்சியெல்லாம் வேண்டாம் என்று காஞ்சி நினைத்திருந்தாலும், குடியிருக்க ஒரு குச்சு, அந்தக் கட்சி சார்பில்தான் இவர்களுக்கு உறுதியாயிற்று. ஒரு விளக்குக்கூடப் போட்டுத் தருவதாகச் சொல்லி இருந்தார்கள். ஆனால் அதற்குள், பிரளயமே வந்தாற்போலச் சண்டையும் வெட்டுப்பழி குத்துப் பழிகளும் மூண்டுவிட்டன.

அத்துடன் கடந்த மூன்றாண்டுகளாக ஆற்றில் தண்ணீரில்லை; கால்வாய், குளங்கள் வறண்டன. அடி குழாய்களின் அலறல்தான் பெரிதாக இருந்தனவே ஒழிய, வயலுக்குப் பாய வளமை இல்லை. அந்த வளமை இன்றி, உழவேது, நடவேது? பஞ்சத்துச் சாகுபடியாக, தெளி விதை தெளித்தார்கள். அதில் முதல் வருசம் நெல்லைவிடக் களைதான் பயிராயிற்று. எனினும் ஐந்து மூட்டை நெல் கண்டார்கள். சென்ற ஆண்டில் நல்ல விளைச்சல் என்று இருந்தார்கள். விதையறுக்கும் வேளையில் மழை கொட்டித் தீர்ந்து வெள்ள நாசம் விளைவித்தது. அத்தோடு குஞ்சானும் பழியேற்றுச் சிறைக்குப்

போனான். ஏதோ மிஞ்சியதைச் சேமனை வைத்துக் கொண்டு அறுத்துக்கண்டு முதல் கொண்டார்கள். அரைக்கால் வயிற்றுக் கஞ்சி... இந்தப் பொடிசுகளை வாடவிடாமல்...

"அம்மோ பசிக்கிது சோறு...?"

சிறுவனைப் பிடியிலிருந்து இறக்கி விடு கிறாள் காஞ்சி. ''வூட்டப்போயி அக்காள வைக்கச் சொல்லி, ரெண்டு பேரும் சாப்பிடுங்க, சோறு! சண்ட போடக் கூடாது!"

பையன் வில்லிலிருந்து விடுபட்ட அம்பாக ஓடிப்போகிறான். பொழுது விடிந்ததி லிருந்து, மழையுமில்லை, வெயிலுமில்லை என்று மந்தமாக இருக்கிறது வானம்.

சேமன் ஈர்க்கைக் கடித்துத் துப்பிக் கொண்டு எதற்கு நிற்கிறான் என்பதை அவள் அறிந்திருக்கிறாள். இப்போதெல்லாம் பொழுது விடிந்து பொழுது போவதற்குள் ஒரு தரமேனும் இந்த நிலத்தை நம்பி வாழமுடியாது என்ற கருத்தை வெளியிட்டுக்கொண்டிருக்கிறான். இவள் வளர்த்த பிரிவினை தெரியாத நல்ல பிள்ளைதான் என்றாலும், அவன் பேச்சிலும் நியாயம்.....?

"மன்னாரு, தஞ்சாவூரில் சைக்கிள் கடை வச்சிருக்கிறானாம். சொந்தத்தில் அஞ்சு சைக்கிள், வங்கில வேற கடன் குடுக்கிறாங்க. இங்க நெலத்தை வித்துப் போட்ட பணத்துக்கு, ஒரு பங்க் கடை வாங்கி இருக்கிறானாம்...... நம்ம பூமியையும் அப்பமே மரைக்காயர் எட்டுக்கு எடுத்துகிறேன்னாரு....."

"தம்பி, ஒங்கண்ணெ இங்க இல்லாதப்ப, நீ இப்பிடிப் பேசலாமா? என்னாங்க வாத்தியாரு! நீங்க சொல்லுங்க! பரம்பர பரம்பரயா, இந்த மண்ணுல ஊறி இத்தையே சோறாக்கி உண்டுபிழைக்கும் பிழைப்ப இன்னிக்குத் தண்ணியில்லைன்னு வுட்டுப் போவுறதா? மழையும் தண்ணியும் ஆண்டவன் வெச்சது. ஒரு காலம் கடுப்பா இருக்கிறதுதா, ஒருகாலம் நல்லது வராமயா போகும்? நாம்ப மட்டுமா சாகுபடி செய்யிறவங்க, ஊரு உலகமிச்சூடும் சாகுபடி செய்யாம பிழைச்சிட முடியுமா? நாயம் செத்துப்பூடுமா?"

சேமனுக்குக் குரல் உரத்தே வருகிறது.

"நாயம் செத்துப் பூடிச்சி. ஆத்துத் தண்ணி இனி வருதுங்கறது கெனாத்தான். கருநாடகாக் காரன், டாம் கட்டி சுத்தமா காவிரியாத்துத் தண்ணிய அடச்சிப் போட்டானுவ. சாகுபடி சாகுபடின்னு இங்க மண்ணப் பாத்துட்டு உக்காந்துகினுந்தா அடிமுட்டாள். தமிழ் நாட்டுக்குத் தண்ணி இல்லேன்னு தீந்து, மானத்தைப் பார்த்துக்கன்னு சொல்லி அஞ்சு வருசமாச்சு அண்ணி!"

இந்தக் கோடு அக்கினிக் கோடாகச் சுடுகிறது. எதிர்கால நம்பிக்கைகளைத் தீய்த்துக் கருக்குகிறது.

சொக்கு வாத்தியார் தொண்டையைச் செருமிக்கொள்கிறார்.

''நீ கவலையே படாத தம்பி. இன்னிக்கிப்பாரு, ஒவ்வொருத்தனும், அரபு நாட்டுக்குக் காவடி கட்டிட்டுப் போவுறான். நீயும்கூட அந்தக் கெனாவுல தான் நிக்கிறன்னு புரியுது. எதுனால? எண்ணெய் வளம். அந்த வளம்தான் இங்கேந்து போறவனுக்கு, எடுபிடி கூலிக்குக்கூட, மூவாயிரம் நாலாயிரம்னு காச வாரிவுடுது..... இம்புட்டுப் பணத்துக்கு என்ன காரணம்? பூமி தார எண்ணெய். இது போல நம்ம நாட்டுக்கு, நம்ம தமிழ்நாட்டுக்கு ஒரு சுபிச்சம் வந்திட்டிருக்கு. இங்க எண்ணெ கண்டுபுடிச்சி, அது பீப்பா பீப்பாயாப் பீச்சி அடிச்சிட்டிருக்கு. தண்ணியில்லன்னு அரபு நாடுங்கள்ல கவலையே ஆரும் படுதில்லே? சமுத்திரத்துத் தண்ணியக்கூட நல்ல தண்ணியாக்கிற சுபிட்சத்தை இந்த எண்ணெ குடுக்குது..... இத பாரு காஞ்சி, நம்ம புள்ளங்க கையில ரேகை எல்லாம், ரொம்ப செழிப்பான எதிர்காலத்தைத்தான் சொல்லுது. உலகத்துல இந்தியாவே சிறப்பான பணக்கார நாடாப் போகும்னு ஒரு குறிப்பு அது. உலக ராச்சிய மெல்லாம் இங்கே வந்து எண்ணெ கேக்குதுன்னா நினைச்சிப்பாரு? ......"

காஞ்சிக்கு இதொன்றும் புரியத்தானில்லை.

“பத்தாவது படிச்சிட்டா, அரபு நாடுங்கள்ல, அப்பன் மவனுக்குக் கார் வாங்கி பிரசன்டு குடுப் பானாம். பொம்பிளங்க, தங்கம்னா, எத்தினி வளவி, எத்தினி சங்கிலி போட்டுக் கிறாங்க? எல்லாம் எண்ணெயில வார செல்வம்......”

இவள் கண்கள் ஒளிர, வியப்பில் சிலை யாக நிற்கிறாள். அப்படி ஒரு கணம் வாழ்க்கை யில் வரப்போகிறதா?

“நெசமாலுமா வாத்தியாரு?”

“பின்ன பொய்யா சொல்லுறேன்? இப்ப பாரு. அலிவலம், நரிமணம், அங்க இங்கல்லாம் ஜகஜ்ஜோதியா எரியிது. நெடுக குளிபோட்டுப் பார்க்கிறாங்க. எம்ப்ளது அடிக்கு, கிருகிருன்னு தண்ணியக் கொட்டிக் கொட்டி பூமியக் குடஞ் சிட்டு, வெடி வைக்கிறாங்க. ட்டேயப்பா! எண் ணெயிருந்திச்சின்னா குபீல்னு மேலுக்கு பொறிப் பொறியா கிளம்பி எரியுதாம்!..... நிச்சயமா காஞ்சி, உம்புள்ள காலத்துல செழிப்பு வாரத்தான் போவுது. மத்திய சருக்காரு இதெல்லாம் சுபிச் சத்துக்குதான் செய்யிறாங்க. உம்புள்ள வாட்ச் கட்டி, காரிலே ஏறிப்போவத்தாம் போறான்...”

இவள் திறந்த வாய் மூடாமல் பார்க்கிறாள்.

நாகு, நாகப்பனாகி, வாட்ச் கட்டிக் கொண்டு காரில் போகிறான். கருப்புக் கண்ணாடியை, ஸ்டைலாகக் கையில் பிடித்தபடி, பம்மென்ற தலையுடன். திருவாரூருக்கு எப்போதோ குஞ்சா னுடன் சினிமா பார்க்கச் சென்றபோது, வாயிலில் நின்ற கட்–அவுட்டை நினைத்துக் கொள்கிறாள். இடுப்புப் பிடித்தமான சட்டை, பில்ட் . . . கையில் மோதரம் . . . சுப்பலச்சுமி – அதுவும் நாகரிகமாக இருக்கும். நல்ல மாப்பிள்ளையாகக் கல்யாணம் செய்து கொடுப்பார்கள்.....

சொக்கு வாத்தியார் ஒன்று சொன்னால் அது பொய்யாவதில்லை. அவர் இவ செயிக்கும் என்று சொன்னபோதும் அதுவே நடந்தது. குஞ்சா னுக்கும்கூட அவர் புத்தி கூறியதுண்டு.....

இப்போது அவர் இப்படி நம்பிக்கை கொடுப்பதனால் சேமன், பூமியை விற்க வேண்டாம் என்று அடங்கிப் போகிறான். மறுநாளே கிளறிப் போட்டுத் தெளிவிதைத் தெளிக்கிறார்கள். விதை முளைத்து பசுமை அரும்ப, ஒரு வாரத்தில் குளிர்ந்த தூற்றலும் விழுகிறது.

காஞ்சிக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. பிள்ளைக்கு அன்று நீராகாரம் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறாள்.

காளவாய்க்காரருக்கு, தோப்பு மாங்குடி யில் முள்ளுக்காடு இருக்கிறது. அதை வெட்டி விறகாக்கி, காளவாய்க்குக் கொடுத்தால் நாலு, ஐந்து கிடைக்கும். கடன் உடன் வாங்கி உரம் வைக்க வேண்டும். களை அதிகமாக மண்டாமல் இருந்தால் ஏழெட்டு மூட்டை காணலாம்....

இவள் வெட்டரிவாளை எடுத்துக்கொண்டு கிளம்புகிறாள். மதகடி தாண்டிப் பாதையில் இறங்கிய நேரத்தில், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓலமிடும் பவனாயியின் குரல் இவளைக் கொக்கிப் போட்டு இழுக்கிறது.

மூசுண்டை போட்டுப் பள்ளிக்கூட வாயி லில் விற்று சட்டிப் பானையில் காசு சேர்த்து வைத்திருப்பாள். குடிகாரப் பையன் சட்டியை உடைத்துக் காசை எடுத்துச் செல்வான். இது வழக்கமான பிலாக்கணம்தான். மருமகள் வேறு யாரையோ சேர்த்துக்கொண்டு கும்பகோணமோ, மாயவரமோ போய்விட்டாள். இரண்டு பிள்ளை களுக்குத்தான் பொறுப்பு என்று தலைமேல் கட்டிக்கொண்டிருக்கிறாள்.

“ஏங் கத்துறிய? புள்ள சட்டி ஒடச்சிக் காசு எடுத்திட்டானா?”

“என்னாத்தச் சொல்ல? அந்த அஞ்சு குழி பூமியில தெளிவித வெதச்சிருந்தே. பாவிங்க, குப்புறப் பேத்துப் போட்டு, மிசின் வச்சி ஓட்ட றாங்க. ஒரு கழிச்சல்ல போவ, கருமாதி வார.....” என்று கையை மருக்கருக்கென்று நெறித்துக் கொண்டு பிரலாபிக்கிறாள்.

இவள் துணுக்குற்றாப்போல் நிற்கிறாள்.

“அவனுவ பேதி வந்து பூண்டோட போவ! கொடலெரியுது. வண்டி பிடிச்சிட்டு வந்து,

பச்சையழிச்சிப் பாளாக்கிப் போட்டானுவ. பச்சப் புள்ளயப் போட்டு மெறிக்கிறாபோல, அவனு வளுக்கு, அதா கிளக்கால உதிச்சி மேக்கால போறானே அவங் கூலி குடுப்பா."

.....இவளும் அந்தப் பக்கத்துப் பூமிக்காரி தான். இவளும் தெளிவிதை போட்டிருக் கிறாளே?...... இது.... இதுவும் மாற்றுக் கட்சிக்காரர் களின் சூழ்ச்சியோ? இப்போது எலக்சன்கூட இல்லையே?

"ஆரு அக்குருமம் பண்ணது?"

"ஆரு? எண்ணெயெடுக்கறானுவளாம்! குழி போட்டு பைப்பெறக்கிப் பாப்பானுவளாம். இல்லேண்ணா போயிடுவானுவளாம். எரிஞ்சு போவானுவ! சீமயம்புட்டுமா மிசின் வச்சி அடிப்பானுவ? லச்சுமியத் தோண்டி எறிஞ்சிட்டு மெஷினுக் காலால தொடச்சி..... வவுத்தப் பத்திக்கிட்டு வருது. என் வவுறு எரியிறாப்பல எரிஞ்சிப்போவ! வாய்க்கால்ல தண்ணி இல்ல, கொளத்துல தண்ணியில்ல, உப்பு படி ஒரு ரூவாங்குறான் எப்படியம்மா பொழக்க?"

சாபமும் பிரலாபமும் ஓயவில்லை.

இவளுக்கும் அடிவயிற்றில் குத்தீட்டி பாய்ந்தாற்போல் ஒரு சந்தேகம் பாய, பதறி ஓடுகிறாள்.

இவள் நிலத்திலும் ஒரு கூட்டம் மனிதர் கள். குழாய் இறக்கும் முயற்சியில், தொப்பி யணிந்த அவர்கள் இவள் மொழி பேசா அந்நியர் கள்.

அவர்கள் காலடிகளில் இவள் உயிராய் வளர்த்த பயிர் நசுங்கித் துவையலாயிருக்கிறது. தோண்டலில் தலைகுப்புறப் பெயர்ந்து உருப் புரியாமல் மண்ணோடு கலந்து போயிருக்கிறது.

தண்ணீர் வண்டி வரப்பில், பசுமையற்ற விளை நிலங்களினூடே வருகிறது. அதன் பின் வளைவில் தொத்திக்கொண்டு புதுமை அனு பவிக்கும் கபடறியாப் பிள்ளைகள். அதில் நாகு..... நாகுவும்...

இவளுக்கு அடிவயிற்றிலிருந்து ஓங்கார மாகக் குரல் எழும்பி ஒலிக்கிறது. "ஏ நாவு.....! நாவு.....!"

இரண்டெட்டு நாலெட்டாகப் பாய்ந்து, ஒட்டிக்கொண்டிருக்கும் பிள்ளையைப் பறித்தாற் போல இழுக்கிறாள். வெறி வந்தாற்போல் கண்களிலும், முகத்திலும் மாறி மாறி முத்த மிடுகிறாள்.

இது..... இந்தப் பயிர்.... இந்தப் பயிர்..... இதைத் தவறவிடக்கூடாது.....

"கண்ணு, ஒன்ன இந்த வண்டில போவா தன்னு சொன்னேனில்ல? அது வாணாம், வாணாம்..... விழுந்தா..... என்ன ஆவுறது?"

கூழாகிப்போக அழுத்திக்கொண்டு திரும்புகிறாள்.

**– இராஜம்கிருஷ்ணன்**

- பயிர் எனும் சிறுகதையில் இடம்பெறும் காஞ்சியின் கிராமத்தை வருணித்து எழுதுக.
- பயிர் நிலங்களை அழித்துப் பிற தேவை களுக்காகப் பயன்படுத்துவதால் உண் டாகும் எதிர்கால விளைவுகள் குறித்து விவாதிக்க.

# புறநகர் வீடு

நகர்.. நகர் – என்றிருக்கும்
புதிய தெருக்களில் குண்டு குழிகள்
அண்மையில்தான் போட்ட குறுக்குச் சாலையில்,
செம்மண் கரைந்து கருங்கல் சல்லிகள்
இப்படிக் கரையக் கூடாது மக்கள் வரிப்பணம்!
நொடிக்காமல் நடக்கவும் முடிவதில்லை.
நடுநிலைப் பள்ளிக்குப் போய்த்திரும்பும்
துணைவியாருக்குக் கால் சுளுக்கிக் கொள்கிறது.
வண்டி மிதித்து,
அடிவயிற்றுக்கு அடியில் வலிக்கிறது எனக்கு.
நகர எல்லையில் கன்னியர்குளம் சாலையில்,
சுடுகாட்டை நெருங்குகையில்..
பாடை போய்க் கொண்டிருக்கும்
பிணம் எரிந்து கொண்டிருக்கும்
வெயிலிலோ நிலவிலோ, நின்று கொண்டிருப்ப
வர்களில்,
அரிச்சந்திரன் மட்டுமே ஒதுங்கி நிற்பவன்.

கொண்டையும் சாய்த்த கோலுமாய்
நிமிர்ந்து நிற்பவன் கவனிப்பது –
சாலை நெரிசலில் தடுமாறும்
ஒரு மர அட்டையையா–
என்னையேவா–
இருக்கலாம். என்றாலும்,
சாலைகளில் நடப்பதையெல்லாம்
ஓரிடத்தில் நின்று பார்த்துவிடமுடியாது யாரும்
புறநகரில் வீடுகட்டிச்
சாலைகளில் போய் வந்துதான்
பார்க்க முடியும்–என்னைப் போல்.

**– த.பழமலய்**

- ‘நகரத்தில் ஒருநாள்’ – உங்கள் அனுபவத்தை நாட்குறிப்பாக எழுதுங்கள்.



# நினைவலைகள்

## காணாமல்போகும் காலம்

ஒருமுறை குழந்தைக்கு அம்மை போட்டிருந்தது. படுக்க வைப்பது மிகவும் சிரமமாக இருந்தது. பக்கத்து வீட்டிலிருந்து பார்க்க வந்த பெரியம்மா ஒருவர் வேப்பிலைகளைக் கொண்டு வந்து படுக்கையில் பரப்பி வைக்கச் சொன்னார். கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் நீளமுள்ள எங்கள் குடியிருப்பின் தெருவில் இரண்டு தடவைகள் குறுக்கும்நெடுக்குமாக நடந்து விட்டேன். எங்கேயும் வேப்பமரமே இல்லை. எங்குப் பார்த்தாலும் குல்மொஹர் மரங்களே கண்ணில் பட்டன. கோயில் வாசலில்கூட வேப்பமரம் இல்லை. மழமழவென்று விரிவாக்கம் செய்யப்பட்ட மொசைக் தரைக்கு நடுவில் வீற்றிருந்த கோயில் முகப்பில் துளசி மாடத்தை மட்டுமே காணமுடிந்தது. மதிலோரமாகச் சில பூச்செடிகள். கிட்டத்தட்ட ஆறேழு மணி நேரங்கள் அலைந்து புறநகரொன்றில் வேப்பமரத்தைக் கண்டு பிடித்து இலைகளைப் பறித்துவர வேண்டியிருந்தது.

நல்ல மழைக்காலம். தொடர்ச்சியாக ஆறேழு நாட்கள் பெய்த மழை ஊரையே கழுவிக் குளிப்பாட்டி விட்டது. குளிரடிக்கும் காற்று முகத்தைத் தழுவ வாசல் கதவைப் பிடித்தபடி நின்றுகொண்டு மழையைப் பார்ப்பது விசித்திரமான அனுபவமாக இருந்தது. சற்றே மழை நின்று தண்ணீரெல்லாம் வாய்க்காலாகப் பெருக்கெடுத்தோடியதைப் பார்த்ததும் குழந்தையும், நானும் காகிதப் படகுகள் ஓட்டினோம். நீரின் வேகத்தில் படகு மிதந்து செல்வதைப் பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருந்தது. சிறிது நேரத்தில் மறுபடியும் மழை தொடர்ந்ததால் வீட்டுக்குள் திரும்பிவிட்டோம். எனக்கு என் சிறுவயது மழை நாட்கள் நினைவுக்கு வந்தன.

எல்லாவற்றையும் அமுதாவுடன் உட்கார்ந்து பகிர்ந்துகொண்டேன். பேச்சோடு பேச்சாக மழை நாட்களில் நாங்கள் உணவாக உட்கொண்ட முருங்கைக் கீரையையும் கேழ்வரகு மாவையும் சேர்த்துப் பிசைந்து செய்யப் பட்ட அடையின் கதையையும் சொன்னேன். உடனே மனதுக்குள் அடை சாப்பிடும் ஆசை பிறந்தது. கேழ்வரகு மாவு வீட்டில் இருந்தது. ஆனால் முருங்கைக் கீரைக்கு எங்கே போவது என்றுதான் புரியவில்லை. அன்று மாலை கடைத்தெருவில் கீரைக்கடைகளில் தேடிப் பார்த்தேன்; கிடைக்கவில்லை.

அதிகாலை நடையில் நான் கடந்து செல்லும் தெருக்களில் எந்த வீட்டிலும் முருங்கை மரத்தைப் பார்த்த ஞாபகமே இல்லை. எங்காவது ஒரு மரம் எந்த இடத்திலாவது தென் பட்டாலும்கூடக் கூச்சத்தை விட்டுக் கீரையைக் கேட்பதில் இருக்கிற தயக்கத்தைத் தவிர்ப்பது சிரமமென்று தோன்றியது. மறுநாள் வழக்கமாக வீட்டுக்குக் கீரை கொண்டுவரும் அம்மாவிடம் சொல்லி வைத்து நாலு நாட்கள் கழித்து வாங்கினோம். முருங்கைக் கீரையைப் பார்ப்பது பொக்கிஷத்தைப் பார்ப்பதுபோல இருந்தது. அன்று இரவில் ஆசை ஆசையாகச் சாப்பிட்ட கீரை அடையின் சுவை மறக்கமுடியாத ஒன்று. அதைத் தொட்டுப் பார்க்கக்கூட மறுத்து, அடை சாப்பிடும் என்னை ஏதோ விசித்திரப் பிராணியைப்போல் என் மகன் பார்த்ததை இன்னும்கூட மறக்க முடியவில்லை.

எங்கள் இளமை நாட்களில் ஏரியில் மீன் பிடித்தல் என்பது விடுமுறையை இனிமையாகக் கழிக்கும் பொழுதுபோக்காக இருந்தது. எங்கள்

வீட்டில் தூண்டிலுக்கான மூங்கில் கழியோ அல்லது மீனைக் கவ்வி இழுக்கும் கொக்கியோ கிடையாது. ஆனாலும் மீன் பிடிக்கப்போகும் நண்பர்களோடு நானும் துணைக்குச் செல்வேன். எல்லாரும் ஆளுக்கொரு கொட்டாங்கச்சியை எடுத்துக்கொண்டு வருவார்கள்.

போகிற வழியில் குளக்கரையோரமாக அல்லது வயல் வரப்புகளின் ஓரமாகக் காணப்படுகிற மண் புழுக்களைப் பிடித்து அந்தக் கொட்டாங்கச்சிகளில் சேகரித்துக் கொள்வோம். அதுதான் மீனை வீழ்த்துகிற இரை. நண்பர்கள் மிக லாவகமாகக் கொக்கியின் வளையத்துக்குள் மண்புழுவைச் செருகி வீசுவார்கள். புழுவை விழுங்குவதாக நினைத்துக்கொண்டு வரும் மீன்கள் தூண்டிலுக்கு இரையாகிவிடும். தக்கை தண்ணீருக்குள் இழுபடும் தருணத்தில், மிகச் சரியாகவும் வேகமாகவும் தூண்டிலை மேலே இழுப்பார்கள் நண்பர்கள். ஒரு கணத்தில் ஏமாந்து தண்ணீரிலிருந்து தரையில் வந்து விழுந்துவிட்ட மீனைப் பார்க்கப் பார்க்க பாவமாக இருக்கும். அதெல்லாம் மனத்தின் ஒரு மூலையில்தான். மற்றபடி ஏதோ வெற்றிகரமான ஒரு காரியத்தைக் கச்சிதமாகச் செய்து முடித்துவிட்ட சந்தோஷம்தான் நெஞ்செங்கும் நிறைந்திருக்கும்.

பிடிபட்ட மீனைச் சுற்றி நின்று, 'எகிறி எகிறி குதிக்கப் பார்க்கும் மீனப் புடியுங்க. ஏமாந்தா ஓடிப்போவும் மீனப் புடியுங்க, துடிச்சித் துடிச்சிப் பொரளுகிற மீனப் புடியுங்க. துண்டு போட்டு கொழம்பு வைக்க மீனப் புடியுங்க' என்று பாடி ஆர்ப்பரிப்போம்.

ஏரிக்கரையில் சந்தடியில்லாத இடத்தில் நிறைய கொக்குகள் காணப்படும். வெள்ளை வெளேரென்ற அக்கொக்குகளின் அணிவகுப்பு, பார்ப்பதற்குக் கண்கொள்ளாத காட்சி. தண்ணீரால் ஏரி நிரம்புகிற பருவத்தில் எங்கிருந்தோ எல்லாக் கொக்குகளும் மிகச் சரியாக வந்துவிடும். அப்புறம் நாலு மாதங்கள் வானத்திலும் கரையிலும் கொக்குகளின் ஊர்வலமாகவே இருக்கும். இதற்காகவே காத்திருந்த மாதிரி வீட்டு மூலையில் கிடக்கும் நாட்டுத் துப்பாக்கியைத் தூசி தட்டி எடுத்துக்கொண்டு தயாராவார்கள் சிலர்.

மிதி வண்டிகளில் பயன்படுத்தப்பட்டு வீசியெறியப்பட்ட பொட்டுக்கடலை அளவுள்ள சின்ன சின்ன குண்டுகளைத்தேடி எடுத்துப் பையில் நிரப்பிக் கொள்வார்கள். கொக்கு வேட்டைக்குக் கிளம்புவது ஏதோ புலி வேட்டைக்கு ராஜா கிளம்பிச் செல்கிற மாதிரிதான் இருக்கும். சிறுவர்களாக இருந்த நாங்கள் இவர்களுக்கு ஏவலாட்களாகக் கூடவே செல்வோம். ஒரே ஒரு முறையாவது சம்பந்தப்பட்டவனுக்குத் தெரியாமல் அந்தத் துப்பாக்கியைத் தொட்டுப் பார்க்கிற ஆசையையும் முடிந்தால் எடுத்துக் குறி பார்க்கிற ஆசையையும் யாராலும் கட்டுப்படுத்தவே முடியாது. கிடைக்கும் வாய்ப்பைக் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்வோம். மணிக்கணக்கில் அலைந்து வேட்டையாடினாலும் எங்கள் துப்பாக்கிக்கு ஒரு கொக்குகூட விழுந்தது கிடையாது. அதனாலெல்லாம் நாங்கள் ஒருபோதும் ஏமாற்றமடைந்ததில்லை. வெற்றியடைவதைவிட வேட்டைக்குச் செல்வதில்தான் எப்போதும் சந்தோஷம்.

எங்கள் ஊர்ச் சத்திரம் அகலமான கருங்கற்களை இணைத்து உருவான திண்ணைகளைக் கொண்டிருந்தது. கொஞ்சமும் அவற்றின் மீது வெயில் படாதபடி சுற்றிலும் நாவல் மரங்கள் அடர்ந்திருக்கும். எந்த நேரத்தில் சென்று அமர்ந்தாலும் அந்தத் திண்ணைகள் ஜில்லென்று இருக்கும். சின்னபாபு சமுத்திரம் சந்தைக்கும் கோலியனூர் சந்தைக்கும் நடுவே நடையாய் நடக்கிறவர்கள் அந்தக் குளிர்ச்சிக்காகவே ஒரு கணம் திண்ணையில் உட்கார்ந்து இளைப்பாறிச் செல்வார்கள். கைகால்கள் கழுவிக்கொள்ளவும் குளிக்கவும் வழிச்சமையலைச் சமைத்துச் சாப்பிடவும் உதவும் வகையில் மிகப் பெரிய கிணறும் அங்கே இருந்தது. கிணற்றை ஒட்டி எப்போதும் பூத்துக் குலுங்குகிற ஒரு மகிழமரம் இருந்தது.

எந்த நேரத்தில் அந்தச் சத்திரத்துப் பக்கம் சென்றாலும் எடுத்துத் தின்ன வசதியாகப் பத்துப்

பதினைந்து நாவல் பழங்கள் உதிர்ந்து கிடக்கும். பழம் தின்று தண்ணீர் குடித்தால் பாதி வயிறு நிரம்பிய மாதிரியே ஆகிவிடும். தரையில் உட்கார்ந்து மணக்கிற மகிழம்பூக்களை எடுத்துப் பை நிறையச் சேகரித்துக் கொள்வேன். சந்தன நிறத்தில் மின்னும் அப்பூக்களின் அழகுக்கும் மயக்கம் தரும் மணத்துக்கும் மனம் பறிகொடுக்காத நாளே இல்லை. சேகரித்து வந்த பூக்களையெல்லாம் வீட்டுத் திருப்பத்தில் இருக்கும் பிள்ளையார் கோயிலுக்குள் கற்பூரம் ஏற்றும் இடத்தில் குவியலாக வைத்து வணங்கி விட்டு வீட்டுக்கு ஓட்டமாக ஓடிச் சென்றுவிடுவேன். பல நாட்கள் அதிகாலையில் தூங்கி எழுந்ததும் சத்திரத்துக்குச் செல்ல மனம் பரபரக்கும். நாவல் பழங்கள் ஒரு காரணம்; மகிழம்பூக்கள் இன்னொரு காரணம்.

இவையெல்லாம் ஒரு காலம். இன்று இவை எதுவும் இல்லை. ஏரியில் தண்ணீர் இல்லை. கொக்குகள் இல்லை. துப்பாக்கி வேட்டை இல்லை. மீன் பிடிக்கும் விளையாட்டு இல்லை. சத்திரமோ, கிணறோ, மரமோ இருந்த சுவடே இல்லை. எல்லாவற்றையும் தரைமட்டமாக்கிவிட்ட இரண்டுமாடிக் கட்டடம்தான் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நிற்கிறது.

மறைந்து போனவற்றைத் திரும்ப உருவாக்குவது சாத்தியமில்லை என்றாலும் இருப்பவற்றையாவது மறைந்து போகாதபடி நம் தலைமுறை காப்பாற்றிக்கொள்ள வேண்டுமே என்று ஆதங்கப்படுகிறது மனம்.

**- பாவண்ணன்**

- நீ பார்த்து ரசித்த இயற்கை எழில் சூழ்ந்த இடங்களை வருணித்து எழுதுக.

# பெரியபுராணம்

**ஆதனூரின் வளம்**

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனல் கொள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட்(டு) ஆதனூர்.

நீற்றலர்பேர் ஒளிநெருங்கும் அப்பதியின் நிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலில் தகட்டுவரால் எழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோய் அசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்கும் செழுங்கமலம்.

**புலைப்பாடியின் இயல்பு**

மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயல்மருங்கு பெருங்குலையில்
சுற்றம்விரும் பியகிழமைத் தொழிலுழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேல் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி.

கூருகிர்மெல் லடியளகின் குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயின்முன் றிலினின்ற வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
ஆர்சிறுமென் குரைப்படக்கும் அரைக்கசைத்த இருப்புமணி.

வன்சிறுதோல் மிசையுழத்தி மகவுறக்கும் நிழல்மருதும்
தன்சினைமென் பெடையொடுங்கும் தடங்குழிசிப் புதைநீழல்,
மென்சினைய வஞ்சிகளும் விசிப்பறைதூங்(கு) இனமாவும்
புன்றலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்தெங்கும் உடைத்தெங்கும்

**–சேக்கிழார்**

- பாடலின் நயம் பாராட்டுக.
- பாடல் மூலம் புதிதாகக் கற்ற சொற்களை அகரவரிசைப்படுத்தி, அகராதி உதவியுடன் பொருள் கண்டறிந்து எழுதுக. அச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுக.

# வீடு தேடி...

## கோவிலாகிப்போன வீடு

சே!........ என்ன மழை!

புறப்படும்போது கூட ஒன்றும் தெரிய வில்லையே. வரவர வானம் கூட முன்னறிவிப் பின்றி மழையைத் துரத்திவிடத் துவங்கிவிட்டது. எனக்கு இப்படி ஒரு ஆசை வந்திருக்க வேண்டாம். அப்பவே நிர்மலா சொன்னாள், நேரத்தோடு அந்த ஆளைப் பார்த்துப் பேச வேண்டியதைப் பேசி முடித்துவிட்டுத் திரும்பி வரப்பாருங்கள் என்று.

வைப்பரேட்டர் என்னவோ அழகாக ஆடியபடி தன் வேலையைச் செய்து கொண்டு தான் உள்ளது. ஆனால் சாலையில் ஒன்றுமே தெரியவில்லை. மதுராந்தகம் ஏரி உடைப் பெடுக்கும் அபாயத்தில் உள்ளதாகச் செங்கல் பட்டுக்காரர் சொன்னது நடந்து விட்டதோ என்னவோ... பின்னே... இத்தனை தண்ணீரும் வானத்திலிருந்தேவா பொழிகிறது.

டேப்பை ஆன் செய்து மெல்லியதாக வைக்கிறேன்.

உறவுகள் தொடர்கதை... உணர்வுகள் சிறுகதை...

ஆஹா.... என்னமாக ஜேசுதாஸ் பாடுகிறார். எனக்கு இந்தப் பாட்டு ஏனோ ரொம்பப் பிடிக்கும். எனக்கு எப்பொழுதும் ரம்மியமான இசையில் மெல்லிசைப் பாடல்கள் கேட்கப் பிடிக்கும். அதிலும் மெல்லிசைக்காகவே உருவானதுபோல் ஜேசுதாஸின் குரல்... இந்தக் குரலை எந்த மொழியில் கேட்டாலும் எனக்கு நீரில் அமிழ்வதுபோல, மழையில் நனைவது போல, பனிபெய்த புல்லில் நடப்பதுபோல, ஜில்லென்று இன்னும் எத்தனையோ....

இந்த மழை என்றதும் ஞாபகம் வருகிறது. மழையில் நனைவது என்றால் எல்லா மழையி லும் அல்ல. பன்னீர்த் துளிகளாக நம்மைச் செல்லம் கொண்டாடும் தூறல் மழைதான் பிடிக்கும். இதோ.... உன்னைத் தகர்த்தே தீருவேன் என்று பூமியுடன் போர் தொடுக்கும் இந்த ஆங்கார மழை எனக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. அது எனக்குக் கோபத்தில் கத்தும். என் மன உணர்வுகளைக் கொஞ்சமும் புரிந்துகொள்ளாத நிர்மலாவையே நினைவூட்டும். இப்போது கூட அவள் சொல்லி அனுப்பிய எச்சரிக்கையை மீறித்தான் மழையில் போய்க் கொண்டிருக்கிறேன். இதற்கு நாளை இந்த மழையை விடக் கொடூரமாகச் சாடுவாள். நான் பூமியாகப் பொறுத்துக் கொள்ளப் பழகியாகி விட்டது. இந்தப் பாதையில் மழை செய்துள்ள பிராண்டல்கள், பள்ளங்கள் போலவே என் மனதிலும் நிறைய காயங்களில் வடு தங்கிப் போய்விட்டது. அதே வேரோடு சாய்ந்து கிடக்கும் மரங்களைப் போலவே நிறைய ஆழமான... என் இளமைக் காலந் தொட்டு என்னுடன் வளர்ந்து வந்த எத்தனையோ எண்ணங்கள், ரசனைகள் சாய்ந்தாகிவிட்டன.

தடார்... ஏதோ ஒரு கல்லில் கார்ச் சக்கரம் இடித்துக் கொண்டது. வண்டி ஒருகுலுங்கு குலுங்கி நான் நேரானேன். அந்தக் குலுங்கலில் உடம்பு மட்டுமல்ல... உள்ளமும் அல்லவா குலுங் கியது.

நான் தவழ்ந்து, நடந்து, வளர்ந்த பூமியல்லவா இது, இந்தத் தடத்தில் நான் கிராமத்திலிருந்து தினமும் நடந்து செங்கல்பட்டுப் பள்ளிக்குச் செல்வேன். பின் வளர்ந்து பெரியவனாகிச் சென்னையில் கல்லூரியில் படித்து முடித்து, பம்பாயில் வேலையில் அமர்ந்து, பட்டதாரி மனைவியை மணந்து, இதோ மாமனார் கொடுத்த சீதனக்காரில்தான் குலுங்கி நிமிர்ந்தேன். இத்தனைக்கும் இந்தப் பூமிதான் அடிக்கல். உண்மை. இந்த மழையிலும் உள்ளே உஷ்ணமாகப் பரவி, நெற்றியில் முத்துகளாக அரும்பியது.

இந்தியாவின் வளர்ச்சியை வளர்ந்துவிட்ட நகரங்களில் மட்டுமே வானளாவிய கட்டடங்களில், தொழிற்சாலைகளில் இரவைப்பகலாக்கும் அலங்கார வர்ண விளக்குகளில் கண்டு பிரமிக்க முடிகின்றது. இதோ இருளில் நீரில் மூழ்கும் என் கிராமங்கள் போல்தான் இன்னும் எத்தனையோ கிராமங்கள்.

நான் டேஷ் போர்ட்டில் இருந்து சிறு டவலை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொள்கிறேன். அதோ சாலையோர எல்லையம்மன் கோயில்... எனக்கு உடம்பு புல்லரிக்கின்றது. இதுதான் எங்கள் ஊரின் ஆரம்பம். இந்தக் கோவில்தான் நுழைவு வாயில்போல். எனக்குள் இதுவரை இருந்த அன்னியத்தன்மை பூரணமாகப் போய்விட்டது.

காரென்ன கார்... எனக்குச் சின்ன வயசில் சேற்றில் கால் புதைய ஓடியதுபோல் இப்பொழுதும் ஓட ஆசையாக இருந்தது. பள்ளி நாட்களில் இதுவரை நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டு மெதுவாக வரும் நான், ஒரு சந்தோஷத்துடன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக.. விர்ரென்று வீட்டை நோக்கி ஓடுவேன். என் நண்பர்களுக்கும் அது தொற்றிக்கொள்ளும். எதற்கு இப்படித் தலைதெறிக்க ஓடி வருகிறீர்கள்? என்று பார்க்கும் பெரியவர்கள் கத்துவார்கள். யார் முதலில் அவர்கள் வீட்டு வாசலை மிதிக்கிறார்கள் என்பதில் ஒரு சந்தோஷப் போட்டி. பெரும்பாலும் நானே ஜெயிப்பேன். காரணம்... ஊரில் முதல் வீடே – என் வீடுதான்.

என் வீடு.... இந்த நினைவு எத்தனை சுகமாக வருகிறது. எது என் வீடு? என் தகப்பன் பாதுகாத்து வைத்தது... ஆம்... பாதுகாத்துத்தான் வைத்தார். ஊருக்கு முதலில் பெரிய வீட்டையும், அதைச் சுற்றிப் பத்து ஏக்கர் நிலத்தையும் அவர் தந்தை அவருக்குப் பாதுகாத்து வைத்தார்... அவருக்கு? .. இது மூன்று தலைமுறை சொத்து... இப்பொழுது என் வீடு...

அதோ வீட்டிற்குச் செல்லும் பாதை பிரிகிறது. நான் மெதுவாகக் காரை வலது பக்கம் திருப்பிப் பாதையில் செலுத்துகிறேன். அப்பாடா... வீட்டுத் திண்ணையில் இரண்டு அரிக்கேன் வெளிச்சப் புள்ளிகள் என்னை வரவேற்றது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் வருவதை யார் சொல்லியிருப்பார்கள்? நான் வீட்டின் முன் வண்டியை நிறுத்துகிறேன். காரின் பக்கவாட்டுச் சன்னலைக் குறைத்துவிட்டுப் பார்க்கிறேன்.

இதென்ன ஊர் ஒட்டுமொத்தமாக இங்கு!... நான் இறங்கி நனைந்து கொண்டே நடையில் ஏறுகிறேன். எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். எனக்கு முகங்கள் புரிய சிறிது நேரமாயிற்று. ஆனால் என்னை உடனே தெரிந்துகொண்ட சந்தோஷம் அங்கு இருந்த எல்லா முகங்களிலும் தெரிந்தது.

“சின்னத்தம்பி! இப்பத்தான் வர்றீங்களா?” பெரியவர் ராமசாமி நாயக்கர் முன்னால் வந்து மெதுவாகக் கேட்டார். நான் ஈரத்தலையைத் தட்டிக்கொண்டே ஆமாம் என்றேன்.

சுற்றிலும் என் பார்வை சென்றது. துளி இடமின்றி இருபது அடி நீள இரட்டைத் திண்ணை இரண்டிலும், பெண்களும் பெரியவர்களும் குழந்தைகளும் ஒடுங்கிக் கொண்டு... இளவட்டங்கள் மட்டும் வெளித்திண்ணையோரம் சிறிது நனைந்தாலும் பரவாயில்லை என்று ஒண்டிக்கொண்டு.... நான் பேண்ட் பாக்கெட்டில் இருந்த சாவியை எடுத்து வீட்டைத் திறந்தேன்.

கீரிச்.... என்று ஓசையுடன் கதவு திறந்து கொண்டது. அது எனக்கு எப்பொழுதும்

பிடிக்காத... எனக்குப் பல்லில் ஒரு கூச்சத்தை உண்டாக்கும் ஒலி, ஆனால் இன்று அம்மாவே என்னை வா... ராகவா! என்று அழைப்பதுபோல் இருந்தது. இந்தப் பல் கூசும் விஷயத்தைக் கூட நிர்மலா பலமாகக் கேலி செய்வாள். அது ஏன் எனக்கு மட்டும் தரையில் ஏதாவது உரசினால், ஸ்பூன் தட்டில் உரசினால், இந்தமாதிரி துருப்பி டித்த கதவுகள், பெட்டிகள் திறக்கையில் போடும் சத்தத்துக்கு என்று இதற்கெல்லாம் பல் கூசுமோ தெரியவில்லை. இதுபோல் வேறு யாருக்கும் பல் கூசுமா என்று தெரிந்துகொள்ள மனம் ஆசைப்படும். அதற்காக யாரிடம் போய், இப்படி... இதற்கெல்லாம் பல் கூசுமோ என்று எப்படிக் கேட்க முடியும்! நீங்கள் ஒரு விசித்திர மனிதர் என்று நிர்மலா எனக்குப் பல விஷயங் களில் முடிவான தீர்ப்பு வழங்கியுள்ளாள். அதை என்று மாற்றி விசித்திரமான பிராணி என்று சொல்லுவாளோ தெரியவில்லை.

நான் கதவைத் தாண்டி உள்நடையில் நின்றேன். அந்த இடமே சென்னையில் இருந்தால் நிச்சயம் ரூபாய் இருநூறு வாடகை வாங்கி விடுவார்கள். அத்தனை பெரிது. நான் பெரியவர் சின்னச்சாமியைக் கூப்பிட்டு ஒரு அரிக்கேனைக் கொண்டுவரச் சொல்லி உள்ளே நேராகச் சென்று அம்மாளின் அறையைச் சாவிபோட்டுத் திறந்து, அறை மூலையில் ஆணியில் மாட்டியிருந்த இரண்டு அரிக்கேன் விளக்குகளை எடுத்துக்கொடுத்து விளக்கேற்றச் சொன்னேன். எரிகின்ற விளக்குகளைக் கொண்டு வந்தார். அதை எடுத்துச்சென்று கூடத்தில் மாட்டும் கொக்கியில் மாட்டினேன். வீடே களையாகிவிட்டது. மற்றொன்றைச் சமையல் உள்ளில் வைத்தேன்.

“சின்னச்சாமி!..”

“ஐயா...”

“அவுங்களையெல்லாம் உள்ளார வந்து நடையிலும், உள் திண்ணையிலும் வசதியாக உட் காரச் சொல்லுங்க” என்றேன்.

அவர் கொஞ்சம் தயங்கினார். எனக்கு முதலில் காரணம் புரியவில்லை. “என்ன... சொல் றேன்... அப்படியே நிக்கறீங்க” என்றேன். “அதில் லைங்க தம்பி.... அவுங்கள்ளே பல ஜாதிகளும் இருக்குது. அடிக்கற மழையிலே இந்த ஊட்டுத் திண்ணையைத் தவிர வேறே இந்த ஊரிலே எல் லாமும் தண்ணிக்குள்ளே... நம்ம வீடு வயலுக் குள்ளே தள்ளி ஊருக்கு முதல்லே இருக்கற தாலே தப்பிடுச்சுங்க... அதான் எல்லாம் உசுருக் குப் பயந்து இங்க வந்து ஒண்டிக்கிட்டிருக்குது.”

எனக்கு முதன் முதலாக அந்தப் பிடிக் காத கொடூர மழைகூட நேசமாகியது. அந்தக் கணம்தான். எத்தனை பெரியவர்கள், அறிஞர் கள் சொல்லால்-செயலால் வற்புறுத்தியும்கூட மாற்றம் கண்டிடாத மனிதர்களை மழையல்லவா மாற்றியுள்ளது? இணைத்துள்ளது?

ஓ! எல்லாம் இழந்து, உயிர் மட்டுமே உடமை என்ற நிலைதான் மனிதன் ஜாதியை மறக்கும் களமோ? அப்படியாயின் சோஷலிஸப் பொதுவுடமைக் கொள்கையின் தனியுடமை மறுப்பின், பரிபூரண வெற்றியே ஜாதியில்லா சமத்துவப் பூமிதானா? அந்த சோஷலிஸப் புரட்சியை இந்த மண்ணில்... மழை... ஆம். அது மட்டுமே இப்பொழுது சாதித்துள்ளது.

நான் புன்னகையுடன் வெளியில் சென்று, “வாங்க... எல்லோரும் உள்ளே வாங்க! என்ன தயக்கம்? இது உங்க வீடுதான்” என்று அழைத் தேன். அந்த ஜனங்களின் முகத்தில் அப்போது தோன்றிய ஆச்சரியம் கலந்த நன்றியை, சந்தோ ஷத்தை எந்தத் தூரிகையாலும் வரைந்திட முடியாது. ஏன், எந்தப் பேனாவும் வார்த்தை களால் வடித்திட முடியாது.

இந்த ஒளியைத்தான் எல்லா ஞானிகளும், எல்லாக் காலங்களிலும் தேடினார்களோ? அது... எல்லாம் இழந்தும் வாழ்க்கையில் நம்பிக்கையை இழக்காத எளிய மக்களின் கண்களில் புதைந் துள்ளதைக் கண்டறியாது போனதால்தான் அவர் கள் எத்தனையோ வழிகளில் தேடியிருக்க வேண்டும்.

நான் இந்த வீட்டிற்கு இரண்டு வருடத்திற் குப்பின் வருகிறேன். ஆமாம்.... சரியாக இரண்டு

வருடமாகிறது. இந்த ஆலயத்தை ஆராதித்த என் அன்புத் தெய்வத்தை இந்த மண்ணிற்குக் காணிக்கையாக்கி விட்டுச்சென்று, அப்பா போன பின்பு நான் எவ்வளவோ வற்புறுத்தியும்கூட அம்மா இந்த மண்ணை விட்டு நகர மறுத்து விட்டாள். மண்ணை விட்டா? இந்த வீட்டை விட்டுத்தான்.

வீடு! அது வெறும் கல்லாலும் மண்ணாலும் மரத்தாலும் ஆனதுதானே என்று நினைக்கிறோம். ஆனால் அந்தக் கூட்டுப் பொருட்களால் உண்டாகும் ஒவ்வொரு வீட்டிற்கும் உயிர் உண்டு என்பதை யார் நினைத்துப் பார்க்கிறார்கள். 'வீடு' என்றால் ஜடம் என்பது பொருள் அல்ல. உணர்ச்சிகள் கலந்த நினைவுத் தொகுப்பே வீடு என்பதற்கு உரிய அர்த்தம்.

ஒவ்வொரு வீட்டிற்கும் அதில் வாழ்ந்தவர்களின் எல்லா உணர்ச்சிகளுடனும் பங்கிருக்கிறது. ஒவ்வொரு வீடும் வாழ்கிறது. முதுமையடைகிறது. மனிதன் சந்தோஷித்தால் பூரிக்கிறது. அவன் அழுதால் நன்றியோடு தானும் சேர்ந்து அழுகிறது. கவனிப்பாரின்றி அனாதையாகிவிட்டால் முதுமையடைந்து கொஞ்சம் கொஞ்சமாக அழிந்தும் போகிறது.

வீடு கூடப் பேசுமா? ஏன் பேசாது? இந்த என் மூதாதையர் வாழ்ந்த, நான் பிறந்த இந்த வீடு என்னுடன் எப்பொழுதும் பேசும். மௌனத்தில் நடைபெறும் அந்த உரையாடல் ரொம்ப இனிமையானது, சுகமானது.

இதுவும் என் சகதர்மினிக்குப் பிடிபடாத விசித்திரம் தான்!

அவளுக்கு இந்த வீடு எந்தக் காலத்திலும் பிடித்ததில்லை. திருமணமாகி முதன்முதலாக வந்தபோதே இதன் கிழட்டுத்தன்மை அவளைப் பலமுறை... (ஒரு நாளைக்குப் பலமுறை) முணுமுணுக்க வைத்தது. அவள் நாகரிகச் சென்னையில் நவீன பங்களாவாசி. பிறந்தது முதல் நவநாகரிகத்தில் வளர்ந்தவள். இது நவீனத்துக்கே இடமில்லாத மாயத் திரைகள் ஏதுமில்லாத மாளிகை. இங்கு நான்கு பக்கச் சுவர்களுடன் வானமே கூரையாகத்தான் பாத்ரூம். தண்ணீர் புழங்கும் இடங்களில் சூரிய வெளிச்சம் படுவது சுகாதாரம் என்று இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவர்கள் கட்டியது. இதுதான் என் மனைவிக்குப் பிடிக்காத மிகப் பெரிய விஷயம் இந்த வீட்டில். எனக்கு மேனியில் வெயிலும், காற்றும்படக் குளிப்பது சுகானுபவம். இதெல்லாம் பிடிக்காத ஜென்மங்கள் என்ன ஜென்மங்களோ என்று எண்ணிக் கொள்வேன்.

என் வீட்டை முதலில் பார்த்திருந்தால் ஒருக்கால் என்னையேகூடத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டாளோ என்னவோ, என் பெயருக்குப் பின்னால் இருந்த பட்டங்களையும், என் எதிலும் அலட்டிக் கொள்ளாத அல்லது எதிலும் ஒட்டாத தன்மையையுமே என் அடக்கத் தன்மையாகக் கொண்டு, நான் தான் தனக்குச் சரியான துணையென்று ஒற்றைக்காலில் பிடிவாதமாக நின்று, கட்டாயமாக என்னைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டாள். அவள் முதன் முதலாக இந்தக் கிராம வீட்டின் உள்ளே வந்து நின்று ஏதோ வரக்கூடாத இடத்துக்கு வந்துவிட்டதுபோல் ஒரு அவஸ்தையுடன் என்னைப் பார்த்தது இன்றும் என் கண்முன் தெரிகிறது. அன்றே நாம் படிப்பை மட்டும் பார்த்து மணந்து கொண்டு மனைவி என் மனதில் சர்... என்று எங்கோ சறுக்கிக் கொண்டு போனாள். அன்றிலிருந்து அவள் சறுக்குவதிலேயேதான் இருக்கிறாளேதவிர தன் செயல்களால் ஒரு அடிகூட மேலே ஏறவில்லை.

அம்மா!

அவள் இந்த வீட்டின் எல்லா இடங்களையும் ஆத்மார்த்தமாக நேசித்தாள். அப்படிச் சொல்வதைவிட இந்த வீட்டிலும் வாழ்ந்தாள்... இந்த வீட்டோடும் வாழ்ந்தாள் என்பதுதான் சரி.. கடைசிவரை இந்த வீட்டைவிட்டுப் பிடிவாதமாக வர மறுத்தவளாயிற்றே அம்மா. புது மணப்பெண்ணாக வாசல் தாண்டி வந்தவள் உயிரற்ற சடலமாகத்தானே இந்த வாசலைத் தாண்டினாள்? அப்படியென்றால் அவள் உயிர் இந்த வீட்டில் தானே நிலைத்திருக்க வேண்டும்? எனக்கு வீடே

அம்மாவாகத் தெரிந்தது. எல்லா இடங்களிலும் அம்மாவின் பார்வை என்னை வருடுவதாகத் தோன்றியது.

லாந்தர் வெளிச்சத்தில் கூடம் ரம்மியமாக இருக்கிறது. வெளிச்சம் சில இடங்களில் பட்டு... சில இடங்களில் படாமல்... அதுதான் அழகு... இந்தக் கூடத்தின் மேல்புறம் மரத்தால் முழு வதும் மூடப்பட்டிருக்கும். அந்தப் மரப்பலகை கள் சதுரம் சதுரமாகச் செதுக்கப்பட்டதுபோல் இருக்கும். அதில் ஒன்றுவிட்டு ஒன்று விரிந்த தாமரைபோல் செதுக்கப்பட்டு... அடடா... என்ன அழகு! வெறும் பலகைபோட்டு மூடாமல் அதிலும் அழகோடு பூ வேலைப்பாடு செய் துள்ள என் தாத்தாவின் அப்பா காலத்தை நினைத்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதுவும் அந்தக்கால தேக்கு மரப் பலகைகள் எல்லாம் காலத்தால் ஒரு கருமை நிறம் கொண்டு, அதுவே அழகாகி, அதுவும் இந்த இருட்டில் விளக்கு வெளிச்சத்தில்தான் இத்தனை அழகு. அதைப் பகலிலோ, முழு வெளிச்சத்திலோ பார்த்தால் எனக்கு ஒன்றும் தோன்றுவதில்லை. கோவில் கர்ப்பகிரஹங்களின் இருட்டழகுபோல் தோன்றியது. எனக்கு நவீனமாக்கப்பட்ட... அதாவது டியூப் லைட், ஏர்கண்டிஷன் சகிதமுள்ள கடவுள்களை மட்டுமே பார்க்கத் தோன்றும். அதுவே பாழடைந்த கோயில், கவனிப்பாரற்ற கோவில், இதெல்லாம் ரொம்பப் பிடிக்கும். கற்பூர ஒளியில் கற்சிலைகூட அந்த எண்ணெய் மினுமினுப்பில், நம்முடன் பேசுவ தாகத் தோன்றும். நமக்கு உறவாகிப்போகும்.

அதோ அந்த இரண்டு தூண்களின் இடை யில் மேலே உத்தரத்தில் இரண்டு அழகான கொக்கிகள் என் இளமைக் காலத்தை ஞாபகப் படுத்திச் சிரிக்கிறது. அதில்தான் சங்கிலியில் மாட்டிய ஊஞ்சல் பலகை இருந்தது. அதை அப்பா இறந்தபோது கழற்றினோம். பிறகு மாட்டவே இல்லை.

இந்த வீடு தொட்டிக்கட்டு வீடு என்பார் களே அது மாதிரி. அதாவது நடுவில் வானம் பார்த்த வாசல் வரும். அதைச் சுற்றித் தூண்களு டன் திண்ணை வரும். அந்தத் திண்ணையை அடுத்து அறைகள் வரிசையாக சுற்றிலும் வரும். மேற்குப்புறம் மட்டும் கூடம் வரும். கூடத்தின் இரண்டு பக்கமும் இரண்டு அறைகள் வரும். இதில் இடப்பக்க அறைக்கு அடுத்ததுதான் சமையல் அறை. சமையல் அறைக்கு அருகில் கூடத்துடன் ஒட்டியுள்ள அந்த அறைதான் பூஜை அறை. நான் சமையல் அறையில் போய் நின்று சுற்றிலும் ஒருதரம் பார்க்கிறேன்.

எத்தனை நாகரிகம் வளர்ந்தாலும் அம்மா பிடிவாதமாகச் சமைத்து வந்த மண் அடுப்பு. அதை அம்மா மாட்டுச் சாணம் கொண்டு மெழுகி, கோலமிட்டு வைப்பாள். அது ஒவ்வொரு முறையும் புதிதாகத் தோன்றும். அம்மாவால் மட்டும் எப்படி அப்படி செய்ய முடி கிறது என்று வியப்பேன். அம்மா அந்த அறை யில் வைத்திருந்த எல்லாப் பொருட்களும் என் பாட்டி வைத்திருந்ததுதான். எதுவும் புதிதாக மாற் றம் செய்யாமல் தன் மாமியார் செய்ததையே எப்படித்தான் அம்மாவால் செய்ய முடிந்ததோ! அதுவும் வியப்புதான்.

திருமணமாகி வரும் புது மருமகளுக்கு வீட்டைப் பற்றிப் போதிப்பதை ஒவ்வொரு மாமி யாரும் தன் கடமையாகச் செய்திருக்க வேண்டும். உபாத்தியாயினிகள் போல் கற்றுத் தந்திருக்க வேண்டும். மருமகள்களும் சிரத்தை யோடும் மரியாதையோடும் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும். அப்போ... வீட்டைப் பொறுத்தவரை அம்மாக்கள் மாமியார் ஆகும்போது பேரா சிரியைகள் ஆகிவிடுகிறார்கள் போலும்.... கற்றுத் தர நிறைய விஷயங்களைச் சுமந்துகொண்டு நிற்பார்கள் போலும்.

ஆனால் என் மனைவி?.... நம் பெண் களைப் படிப்புத்தான் பல விஷயங்களில் மாற்றுகிறதோ? மாற்றத்தான் வேண்டும். படிப் பறிவே மாற்றங்களுக்காகத்தான். ஆனால் மாற்றங்கள் எதில் என்பதில்தான் நம் பெண்கள் தவறான அர்த்தம் கொண்டுள்ளார்கள் என்பது என் எண்ணம்.

அறிவு வளர்ச்சியும், மாற்றங்களும் சிந்தனையைச் செம்மைப்படுத்த என்பது ஏனோ நம் பெண்களென்ன, நம் ஆண்களே சரியாகப் புரிந்துகொள்ளாத ஒன்று என்றே தோன்றுகிறது. நம் பெண்கள் மாற்றங்கள் என்பதைத் தம் உடைகளில், வழி வழி வந்த பண்புகளில், சமையல் கட்டு உட்பட தம் இல்லத்தவர்கள்வரை என்று எண்ணி விடுவதுதான் நம் பெரும் இழப்பு. என் மனைவி போதும். பட்டப்படிப்புக்கும் அவள் சிந்தனை, செயல் எதற்குமே சம்பந்தமிருக்காது. எந்த ஒரு பண்பையும், எந்த ஒரு சிந்தனையையும் தராத கல்விதான் எதற்கு? இன்றைக்கு படிப்பது வேலை பார்க்க, சம்பாதிக்க. சம்பாதிப்பது சுகங்களை வளங்களைத் தேட என்பதற்கு மட்டுமே வளர்ந்து விட்ட இந்த ஏகாதிபத்திய சிந்தனையின் ஆணிவேர் எங்கே எப்போது முளைத்தது? ஏனோ எனக்கு இந்தக்கல்வியில் உடன்பாடே இல்லை. உயிர்வாழ உணவு தேவையா? உணவு உண்ண உயிர்வாழ்வதா? என்ற கேள்வி போல் சிந்தனையைச் செம்மைப் படுத்தாத வளர்ச்சியைத் தரும் இந்தக் கல்வியால் என்ன பயன்? என் அம்மா படிக்கவில்லை. என் பாட்டியும் படிக்கவில்லை... என் தாத்தா கூடப் படிக்கவில்லை. ஆனால் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் மற்றவர்கள் நினைவுகூறும் வகையில் வாழத் தெரிந்திருந்தார்கள். வாழ்ந்து மறைந்து விட்டார்கள். இந்த வாழ்க்கைப் பண்பை எந்தப் பல்கலைக் கழகமும் கற்றுத் தந்துவிடவில்லை. நடைமுறை வாழ்க்கையில் எளிய நாகரிகம், அன்பு, பாசம், இரக்கம் போன்ற நற்பண்புகளே பெற்றுத் தந்தன.

நான் எதற்காக இங்கு வந்தேன் என்பதை ஒருமுறை எண்ணிப் பார்க்கிறேன். இரண்டு வருடங்களாக இந்த வீடு பூட்டித்தான் கிடக்கிறது. அப்பா போனபிறகு நிலத்தைச் செங்கல்பட்டு பெரும் விவசாயி ஒருவர் குத்தகைக்குப் பார்த்து வருகிறார். இங்குள்ள பல சிறு விவசாயிகளின் நிலங்கள் இன்று அவர் சொத்தாக மாறிப்போய் விட்டது. காரணம்? எல்லாம் காலத்தால்தான்........ அதன் வளர்ச்சியால்தான். நான் அம்மா இருக்கும்வரை ஆறு மாதத்திற்கு ஒரு முறை வந்து போவேன். அதுவும், நிர்மலா ஒரு இரண்டு நாள் கூடத் தங்கமாட்டாள். அம்மாவும் வற்புறுத்த மாட்டாள். அம்மா.... எல்லாக்கால உண்மைகளையும் ஒப்புக்கொண்டு போகும் அனுசரணை தெரிந்தவள். நான்தான் இருதலைக்கொள்ளி எறும்பாக அம்மாவின் அன்பிலும் மனைவியின் பிடிவாத உணர்விலும் திணறுவேன். இன்று என் வளமான பம்பாய் வாழ்க்கை நிர்மலாவின் அப்பா தந்ததுதான். நிர்மலாவின் அப்பா என்றால் நிர்மலாதான். இதனால் நான் மேலும் அடக்கமானவனாகிப் போனேன். இதை மறுத்தால் நான் நடைமுறை உண்மையை மறுத்தவனாவேன்.

அம்மா போனபின் இந்த இரண்டாண்டுகளாக ஏனோ எனக்குச் சென்னை வந்தாலும் இங்கு வரத் தோன்றவில்லை. செங்கல்பட்டுக்காரர் கணக்காகக் குத்தகையை டிராப்டாக அனுப்பிவிடுவார். அவர் கடந்த இரண்டுமுறை வந்திருந்தபோதும் சென்னையில் வந்து நிர்மலா வீட்டில் சந்தித்தார். தனக்கு நிலத்தையும் வீட்டையும் வாங்கிக்கொள்ளும் எண்ணம் இருப்பதை மறைமுகமாக நிர்மலா காதில் போட்டு வைத்தார். நிர்மலா என் காதில் அடிக்கடி அதைப்போட ஆரம்பித்துவிட்டாள். அதன் விளைவே இந்த என் செங்கல்பட்டு விஜயம். நாளை மறுநாள் நிலத்தைக் கிரயம் செய்து கொடுக்க உள்ளேன்.

என் சிந்தனையைக் கலைத்துவிட்டு அப்பா ரூமுக்குச் சென்றேன். அங்குக் கட்டில் காலியாக.... அப்பா இந்தப் பழங்கால தேக்கு மரக் கட்டிலில் படுப்பதற்காகவே ஆகிருதி படைத்தவர்போல் படுத்திருப்பார். நான் மெதுவாக அதைத் தொட்டுப் பார்த்தேன். என் விரல்களில் சிலீரென்று ஒரு உணர்வு பரவியது. அப்பாவை, தாத்தாவைத் தொட்ட மாதிரி. இப்போ நான் மட்டுமே நிற்கும் தனிமையைக் கண்கள் கலங்க அவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். எனக்கு மகன் பிறந்ததும் அவனை இந்தக் கட்டிலில் உட்கார வைத்துப் பார்க்கவேணடும். இந்த வீட்டின் ஒவ்வொரு இடத்தையும், அவை என்னுடன் சம்பந்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளையும்

அவனிடம் கட்டாயம் சொல்ல வேண்டும். அப்பாவின் ஈசிசேரை எடுத்துத் துடைத்து, தூசி தட்டிப் போட்டுக்கொண்டு சாய்ந்தேன். சாப்பி டாதது நினைவு வந்தது. ஆனால் பசிக்காதது ஆச்சரியமாக இருந்தது. அப்படியே தூங்கி விட்டேன் போலும். காலையில் விடிந்துவிட்ட உண்மையையே கைக்கடிகாரம்தான் உணர்த் தியது.

ஜன்னலைத் திறந்து பார்த்தேன். இன்னும் மழையின் தீவிரம் குறையவில்லை. இதென்ன பூமியுடன் இப்படியொரு போராட்டம்? பூமியைத் தகர்த்து வெற்றி கொள்ளலாமா? இது நடக்கும் காரியமா? மழை நிச்சயம் தோற்கத்தான் போகிறது. வெளிவாயிலில் கார் தண்ணீரில் படகுபோல் மிதந்து கொண்டிருந்தது. நான் திரும்பி வராததை நினைத்து நிர்மலா கவலைப் படுவாளோ? இல்லை, கோபப்படுவாளோ? நிச்சயம் கோபம்தான். நான் இங்கு வந்திருப் பேன் என்று யூகித்திருப்பாள். இந்த சந்தோஷத் திற்குமுன் அவள் கோபம் எம்மாத்திரம்?

நான் வெளியில் வந்து சுருண்டு தூங்கும் அப்பாவி ஜனங்களைப் பார்த்தேன். பசியின் களைப்பு பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. நேரம் போய்க் கொண்டே இருந்தது. மழையின் சீற்றம் குறைந்துள்ளதாகத் தோன்றியது. நான்கு பேர்களைக் கூப்பிட்டுக் காரை ரோடுவரை தண்ணீரில் தள்ளிவரச் சொன்னேன். மெயின் ரோடு வந்ததும், பெரியவர் ராமசாமி நாயக்கரை யும், கண்ணப்பக் கிராமணியையும் என்னுடன் காரில் ஏறச் சொல்லிச் செங்கல்பட்டை நோக்கி வண்டியை விட்டேன். கார் மழையில் ஊறிய தால் மக்கர் செய்துவிட்டு ஒரு வழியாகப் புறப் பட்டது.

வழியெங்கும் மழையினால் ஏற்பட்டிருந்த சேதம் நெஞ்சை வலிக்கச் செய்தது. விளை நிலங்கள் எல்லாம் தண்ணீருக்குள், பாதையே கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனால் நேற்றைய இரவு சீற்றம் இப்பொழுது இல்லை. நான் நேராகச் செங்கல்பட்டு சென்று குத்தகைக் காரரைச் சந்தித்தேன். அவரின் உதவியோடு ஒரு மூட்டை அரிசி, கொஞ்சம் பருப்பு, மிளகாய்த்தூள், காய்கறி என்று சமையல் பொருட் களை இரண்டுமணி நேரத்தில் சேகரித்தேன். முதலில் சாப்பிட ஏதாவது வாங்கியாக வேண்டும். ஓட்டல்கள் எல்லாம் மூடப்பட்டுக் கடைகள்கூட வீட்டுடன் இணைந்தவை ஒன்று இரண்டுதான் திறந்து இருந்தது. கிடைத்த கடை களில் ரொட்டி, பிஸ்கட், பன் என்று வாங்கி நிரப்பினேன். செங்கல்பட்டுக்காரர் மூலம்தான் முழு செய்தியும் கிடைத்தது. மதுராந்தகம் ஏரி உடையும் அபாயத்தில் உள்ளதாம். கிளியாற்றுப் பாலம் உடைந்து வழியில் இருந்த கிராமங்கள் மூழ்கிவிட்டதாம். நான் சென்னை செல்லும் மார்க்கப் பாதைகள் உடைந்து அபாயகரமாக உள்ளதாம்.

நான் இன்னும் இரண்டு நாட்களுக்குச் செல்லப்போவதில்லையென்று கூறிவிட்டுத் திரும்பினேன். செங்கல்பட்டுக்காரரே கிரயத் தைத் தள்ளிவைத்துக் கொள்ளலாம் என்று யோசனை கூறினார். சரி என்று சொல்லிவிட்டு நான் கிராமத்துக்குத் திரும்பினேன்.

பரணில் இருந்த பழைய பலகைகள், உடைந்த மரக்கட்டைகள் என்று எதை எதையோ பிளந்து அம்மாவின் சமையல் அறையில் எல்லாம் பெண்களும் இணைந்து என்னவோ சமையல் மும்முரமாக நடந்தது. பசியோடு நானும் அவர்களுடன் காத்திருந்தேன். குழந்தை களெல்லாம் பகிர்ந்துகொடுத்த பன்னிலும் பிஸ்கட்டிலும் தயக்கம் நீங்கி சந்தோஷமாகக் கூடத்தில் ஓடி விளையாட ஆரம்பித்தன. நான் மெதுவாக ஊர் ஜனங்களிடம் ஊரின் நிலைமை குறித்துக் கேட்டேன். ஊரின் படுமோசமான நிலைமை என்னை வேதனை கொள்ளச் செய்தது.

எந்த வளர்ச்சித் திட்டங்களும் எல்லாக் கிராமங்களையும் முழுமையாக வந்து முன்னேற்றி விடவில்லை என்ற உண்மை இந்தச் சுதந்திர நாட்டின் குடிமகன் என்ற உணர்வில் என்னை வெகுவாக நாணம் கொள்ளச் செய்தது. நாடு செய்தது இருக்கட்டும்... நான் என்ன

செய்தேன் என்று எண்ணிப் பார்த்தேன். இந்த ஊரில் படித்த இளைஞர்களே ஒரு சிலர் தான். நாங்களும் எங்கள் படிப்புத் தந்த வசதிகளை மேலும் பெருக்கிக்கொண்டு வாழ நகரங்களை நோக்கித் தஞ்சமடைந்துவிட்டோம்.

என்னைப்போல், என் கிராமத்து இளைஞர்கள்போல் இன்று காரிலும் நவநாகரிக உடையிலும் நகரங்களில் பவனிவரும் பல உயர்ந்த மனிதர்கள் தங்கள் சொந்தக் கிராமங் களுக்குப் புறமுதுகு காட்டி நகரத்தில் ஜெயக்கொடி நாட்டுபவர்கள்தான். எத்தனை அரசியல்வாதிகளின் எத்தனை பொறியியல் வல்லுநர்களின் பிறப்பிடங்கள் இந்தக் கிராமங் கள்? ஆனால் அந்த மண்ணின் வித்துகள் ஆசைக்காற்றிலும் சுயநலப்பறவைகளின் கால் களினாலும் விழுந்து முளைத்துச் செழித்துப் பயன் தருவதோ நகரங்களிலும் அயல்நாடுகளி லும்தான். கிராமங்களைப் புறக்கணித்து, சொந்த மண்ணை மறந்த இந்தப் புதல்வர்களால் எங்கள் கிராமம் போலவே இன்று இந்தியாவின் எண்ணற்ற கிராமங்கள் அழிந்துவிடும் அபாய கட்டத்தில் இங்குப் பழமைக்கும் வயோதிகத்திற் கும் மதிப்பும், பாதுகாப்பும் இல்லை. அதனால் தான் வயோதிகர் காப்பகங்கள் இன்று நகரங்கள் தோறும் தோன்றியிருக்கின்றன. இதுவும் நாம் மேலை நாடுகளில் கற்றுக்கொண்ட நாகரிகமே.

இவர்களிடம் பேசியதில் இங்கு அவர் களைப் பற்றி மட்டுமல்ல.. என்னைப் போன்ற இளைஞர்களின் சுயநலமும் புரிந்ததால் நான் வேதனையில் மூழ்கினேன். ஆரம்பப் பள்ளிக் கூடம் கூடச் சரியாக இல்லாது அழிந்து வரும் என் கிராமத்துக்கு நான் ஏதாவது செய்தேயாக வேண்டும். அந்த எண்ணம் எனக்கு இன்று ஏற்படக் கூட இந்த வீடுதான் காரணமோ.... ஆம்! இது என் தாய் வாழ்ந்த வீடு... இன்று இதுவே என் தாய்தான். அம்மா! உன்னை இனி தனியாக விட்டுப்போக மாட்டேன் என்று முனங்கிக் கொண்டேன்.

இன்றோடு இரண்டு நாட்களாகி விட்டது. மழையும் குறைந்து நீர் வற்றத் தொடங்கியுள்ளது. பெண்ணைப்போல் ஓடி ஒளிந்திருந்த சூரியனும் மெதுவாய் வெளி வந்து பார்க்கத் தொடங்கினான். நான் ஊர் பெரியவர் ராமசாமி நாயக்கரை அழைத்து என் முடிவைச் சொன்னேன், என் இந்த வீட்டைப் பள்ளிக்கூடமாக நூல் நிலையமாக மாற்ற எண்ணியுள்ளதை.

அம்மாவின் பெயரில் இது இலவசப் பாடசாலையாக இனி இயங்கும். இந்த நிலத்தின் வருமானம், விளைச்சல் எல்லாம் இந்தப் பாடசாலைக்கே என்று கூறினேன். ஆனந்தத்தால் அந்த வயோதிக மனிதரின் கண்களில் கண்ணீர் வடிந்தது. ஆம்.. இனி இந்தப் பிள்ளைகள் மழையில், வெயிலில், வயல் வெளிகளில் நடந்துசென்று படிக்கவேண்டாம். இயலாமையால் கல்வித் தொடர்பைத் துண்டிக்க வேண்டாம். நான் இதற்காக மேற்கொண்டு கவனிக்க வேண்டிய காரியங்களைக் கவனிக்க, அதற்கான அதிகாரிகளை, இலாக்காக்களைத் தேடிச் சென்னை புறப்பட்டு விட்டேன். ஊரே திரண்டு வந்து என்னை வழியனுப்பியது. இதோ நான் சென்னையை நோக்கிச் செல்கிறேன்.

காரில் இருந்த டேப்பை மீண்டும் ரிவர் ஸில் கொண்டுவந்து ஆன் செய்தவுடன் ‘உறவு கள் தொடர்கதை.... உணர்வுகள் விடுகதை.... ஒரு கதை இன்று முடியலாம் முடிவிலும் ஒன்று தொடரலாம்... இனியெல்லாம் சுகமே...’ ஜேசுதா ஸின் குரல் என்னைத் தழுவியது.

என்னதான் போராடினாலும் மழையால் பூமியைத் தகர்க்க இயலவில்லை. அதன் பின்வாங்கல், இன்றைய மௌனம் என்னையும் நிமிர வைத்தது. நிர்மலா கோபிப்பாள் என் முடிவைக்கேட்டு, கோபிக்கட்டுமே... நான் பூமி... அந்த மழையால் என்னைத் தகர்க்க இயலாது. நான்தான் வெற்றிபெற்றே ஆக வேண்டும்.

**– பரிமளமுத்து**

- ‘கோவிலாகிப் போன வீடு’ எனும் தலைப்புப் பொருந்தும் தன்மையைத் திறனாய்வு செய்க.

# மாறுவோம் கிராமத்திற்கு!

நடக்கின்ற பாதையெல்லாம் கடைகள்; கால்கள்
நடனமாடி எடுத்து வைக்கும் நகரச் சாலை
கடப்பதற்குள் நெரிசலிலே ஆணும் பெண்ணும்
கரமுரசி உடல்மோதி பிதுங்கும் கண்கள்
முடமான நொண்டியைப்போல் தத்தித் தத்தி
முன்னேற உடலெல்லாம் சோர்ந்து போகும்
இடம் சிறிதும் இல்லாமல் மக்கள் கூட்டம்
இடைவெளியே இல்லாமல் ஊர்ந்து செல்லும்!
முகங்களெல்லாம் புதுமுகங்கள் சற்றே நின்று
முறுவலித்துப் பேசுவோர்கள் யாரு மில்லை
அகங்களினைத் திரையிட்டு மறைத்துக் கொண்டு
அடுத்த வீடும் தெரியாமல் ஓடுகின்றார்!
நகந்தன்னை வெட்டுதல்போல் நேயந் தன்னை
நறுக்கி விட்ட தன்னலத்துக் குறு மனத் தோர்
நுகந்தடியின் மாடுகளாய்க் குடும்பத் தோடு
குலவு வதற்கும் நேரமில்லா எந்திர வாழ்க்கை

மரங்களினை வளர்ப்பதற்கு மண்ணோ யில்லை
மாடிகளால் காற்றுவர வழியோ யில்லை
வரவுகளாய் வாகனங்கள் கக்குகின்ற
வன்நஞ்சுப் புகையாலே தூய்மையில்லை
பரவிநின்ற ஏரிதொழிற்சாலை யாகிப்
பருகுவதற்குக் கிணறுகளில் தண்ணீ ரில்லை
நரகமாகிப் போனதின்று நகர வாழ்க்கை
நாமிதனை உணர்ந்தேற்போம் கிராம வாழ்க்கை!

**– பாவலர் கருமலைத்தமிழாழன்**

- ‘நரகமாகிப் போனதின்று நகர வாழ்க்கை’ எனக் கவிஞர் ஆதங்கப்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து விளக்கக் குறிப்பு எழுதுக.

- கிராமத்திலிருந்து நகர்ப்புறங்களுக்குச் சென்று தனிமை அடைந்த முதியவர் களைப் பேட்டி கண்டு, அவர்களின் மன உணர்வுகளைப் படைப்பாக வெளியிடுங் கள்.

**சொல்**

எழுத்துகள் தனித்தோ சேர்ந்தோ அமைந்து ஒரு பொருளைத் தருமானால் அது சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

ஆ. விண், மலர், கேரளம், சிலப்பதிகாரம்.
படி, ஓடு, சொல், மகிழ்ச்சி

ஓர் எழுத்து மட்டுமே தனியாக வந்து பொருள் தருமானால் அது ஓரெழுத்து ஒருமொழி எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

ஆ, பூ, தீ, மா, கோ

- பாடப்பகுதியிலிருந்து ஓரெழுத்து, ஈரெழுத்து, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்து கள் வருகின்ற சொற்களைத் தேர்ந் தெடுத்து அகரவரிசைப்படுத்துக.

## பெயரும் வினையும்

சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**பெயர்ச்சொல்**

ஏதேனும் ஒன்றின் பெயரைக் குறிப்பிடும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு** :

மனிதன், குமரி, செல்வன், தாமரை, அரசு, கல், காற்று, மதுரை, நாற்காலி, அழகு

**வினைச்சொல்**

ஏதேனும் ஒரு செயலைக் குறிப்பிடும் சொல் வினைச்சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு** :

இரு, தேடு, நில், சிரி, விழு, மகிழ்

- பாடப்பகுதியிலிருந்து பெயர்ச்சொல், வினைச்சொற்களைத் தொகுத்து வகைப்படுத்திப் பட்டியலிடுக.